**செ. வெ . எண் . 310** **7.9.2006**

# செய்தி வெளியீடு

ஹஜ் 2006–II-ற்கு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு பல்வேறு மையங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம்கள் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும்.

2. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பின்வருமாறு நடைபெறவுள்ளன:–

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் சார்ந்தவர்கள் |
|---|---|---|---|
| 1. | 10–9–2006 ஞாயிற்றுக் கிழமை | அஸீஸியா ஷாதி மகால், அஞ்சுமன் தெரு, வேலூர்-4. | வேலூர், மேல்விஷாரம், அரக்கோணம், இராணிப்பேட்டை, வாலாஜாபாத், காட்பாடி, குடியாத்தம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம். |
| 2. | 10–9–2006 ஞாயிற்றுக் கிழமை | பாசிபட்டரை ஜும்மா மசூதி, பாசிபட்டரை தெரு, வெளிப்பட்டினம், இராமநாதபுரம், (புது பஸ் ஸ்டாண்டு அருகில்) | இராமநாதபுரம் |
| 3. | 14–9–2006 வியாழக்கிழமை | NMZ விழா அரங்கம், நாகேஸ்வரன் கோயில் தெரு, ஆம்பூர். | ஆம்பூர், பேர்ணாம்பட்டு மற்றும் உம்ராபாத். |
| 4. | 16–9–2006 சனிக்கிழமை | ஹஜரத் உமர் (ரலி) கல்வி அறக்கட்டளை, | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் சார்ந்தவர்கள் |
|---|---|---|---|
| | | எண்.25, சின்ன வாத்தியார் தெரு,<br>தர்மபுரி-636 701. | |
| 5. | 16–9–2006<br>சனிக்கிழமை | மஸ்ஜித் அல்–பிலாஸ் ஜமாத் மசூதி,<br>சுப்ரமணியபிள்ளை தெரு,<br>எஸ்.எஸ். காலனி,<br>மதுரை–16. | மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை |
| 6. | 16–9–2006<br>சனிக்கிழமை | A.R.S. மஹால்,<br>எட்டயபுரம் ரோடு,<br>சுசி பைக் ஷோ ரூம் எதிரில்,<br>தூத்துக்குடி. | தூத்துக்குடி |
| 7. | 16–9–2006<br>சனிக்கிழமை | M.A.R. கல்யாண மண்டபம்,<br>கிழக்கு வாயில் மார்க்கெட்,<br>(பாம்பாட்டி மசூதி அருகில்),<br>தஞ்சாவூர். | தஞ்சாவூர் |
| 8. | 17–9–2006<br>ஞாயிற்றுக் கிழமை | மதரஸத்தூர் ரஹ்மானியா அரபிக் கல்லூரி,<br>கிள்ளியனூர்,<br>மயிலாடுதுறை வழி. | திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம். |
| 9. | 17–9–2006<br>ஞாயிற்றுக் கிழமை | 105, மேட்டுப்பட்டி ரோடு,<br>பேகம்பூர்,<br>திண்டுக்கல்–624 002. | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 10. | 17–9–2006<br>ஞாயிற்றுக் கிழமை | மதரஸே முஃபிதே ஆம் ஹால்,<br>1328, நீல்பீல்டு மசூதி தெரு,<br>வாணியம்பாடி -635 751. | வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர். |
| 11. | 17–9–2006<br>ஞாயிற்றுக் கிழமை | முஸ்லிம் அனாதை இல்ல வளாகம், காதிர் நகர்,<br>ஹை கிரவுண்ட்ஸ்,<br>திருநெல்வேலி–627 011. | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி |
| 12. | 18–9–2006<br>திங்கட்கிழமை | ஹோட்டல் அரிஸ்டோ,<br>டயமண்ட் ஹால்,<br>எண்.2, திண்டுக்கல் ரோடு,<br>திருச்சிராப்பள்ளி–620 001. | திருச்சி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் |
| 13. | 19–9–2006<br>செவ்வாய் | தமிழ் நாடு பைத்துல் ஹுஜ்ஜாஜ்,<br>(ஹஜ் ஹவுஸ்), | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் சார்ந்தவர்கள் |
|---|---|---|---|
| | கிழமை (தமிழ்) / 20–9–2006 புதன்கிழமை (உருது) | எண்.2, டிமெல்லோஸ் ரோடு, சூளை, சென்னை–600 112. | |
| 14. | 19–9–2006 செவ்வாய் கிழமை | ஷம்சுல் இஸ்லாம் ஹனஃபி சுன்னத் ஜமாத், திப்பு நகர், சாராமேடு ரோடு, கரும்புக்கடை, கோயம்பத்தூர்–641 008. | கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி. |
| 15. | 20–9–2006 புதன்கிழமை | ஹாஜியானா அரங்கம், திருநகர் காலனி, ஈரோடு–638 003. | ஈரோடு மற்றும் கரூர் |
| 16. | 21–9–2006 வியாழக்கிழமை | ரஹ்மானியா மதரஸா மஸூதி, குமாரசாமி பட்டி, சேலம்–636 007. | சேலம் மற்றும் நாமக்கல். |
| 17. | 23–9–2006 சனிக்கிழமை | எஸ். முத்துக்கிருஷ்ணன் செட்டியார் திருமண மண்டபம், 38, கிளைவ் தெரு (தேரடி தெரு), கடலூர் பழைய நகரம். | கடலூர் மற்றும் விழுப்புரம். |

3. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட அனைத்து ஹஜ் பயணிகளும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் மட்டும் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் தாங்கள் விரும்பினால் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

**4.** இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆலிம்கள் ஹஜ்ஜினை முழுமையாக நிறைவேற்றுவது பற்றிய விளக்கங்கள் அளிப்பார்கள்.

**5.** மேலும், இது குறித்து ஏதேனும் தகவல் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: **044–28252519** மற்றும் **044–28227617**)

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9